விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 115 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 30 வியாழக்கிழமை (13.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## சீரணி நாகம்மாள் திருவிழாவை நடத்துக

### சண்டிலிப்பாயில் கவனயீர்ப்பு



06

## 'தமிழர் மரபுரிமைகளைப் பாதுகாப்போம்'

# தமிழர் தாயகத்தில் மாபெரும் கையெழுத்துப் போராட்டம், உண்ணாநோன்பு

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் மரபுரிமைகளை பாது காப்போம் எனும் தொனிப் பொரு ளில் தமிழர் தாயகம் எங்கும் மாபெ ரும் கையெழுத்துப் போராட்டம் மற்றும் உண்ணாநோன்பு போராட் டம் இடம்பெறவுள்ளது என ஒருங் கிணைந்த தமிழர் கட்டமைப்பு அறிவித்துள்ளது.

உண்ணாநோன்புப் போராட் டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை நல்லை ஆதீன முன்ற லில் இடம்பெறவுள்ளது.

குறித்த போராட்டம் 11

## பாராளுமன்றத்தின் முழு ஆதரவுடன்

# 13வது திருத்தச் சட்டத்தை அமுலாக்க நடவடிக்கை

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அனைத்து கட்சிகளின் ஆதரவு டன் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.



ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும்போதே அலி சப்ரி இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மூன்று கட்டங்கள் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப அமைச்சரவை உப குழு உரு வாக்கப்பட்டது.

பாராளுமன்றத் தில் ஏனைய 11

### பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்

## கருப்பை வெடித்ததில் பிறந்த குழந்தை மரணம்

### விசாரணைக்கு உத்தரவு

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிசுவொன்று உயிரிழந்தமை தொடர்பில் விசா ரணை மேற்கொள்ள உத்தரவிடுமாறு பொலிஸார் ஊடாக நீதிமன்றத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 11

### கர்ப்பிணி மனைவியை

## துப்பாக்கியால் சுட்ட கணவன் கைது

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி),

கிளிநொச்சி - அக்கராயன்குளம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட கரிதாஸ் குடியிருப்புப் பகுதியில் காத லித்து திருமணம் முடித்த, கர்ப்பிணி மனைவியை இடியன் துப்பாக்கியால் 11



## ஊடகங்களை முடக்குவதற்கு அரசாங்கம் புதிய சட்டமூலம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊடகங்களை முடக்குவதற் காக ஒளிபரப்பு அதிகார சட் டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத் துள்ளதாக எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் ஒளிபரப்பு அதிகார சட்டம்பற்றி தெரிவிக் கப் பட் 11

## காய்ச்சல் பரவும் அபாயம்

### மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் காய்ச்சல் பரவும் 11

## பயங்கரவாத சட்டம் நீதிமன்றமே தீர்மானிக்கும்

### நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் மனித உரிமைகளை மீறும் வகையிலான ஏற்பாடுகள் காணப்படு கின்றனவா இல்லையா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்கும்.

சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்டதன் பின்னர் அது குறித்து தாக்கல் செய்யப்படும் மனுக்கள் மீதான பரிசீலனைகளின் அடிப்படையில் திருத்தங்களை செய்ய வேண்டி யேற்படின் அரசாங்கம் நிச் 11

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2025 வரை ஒத்திவைக்கப்படும்

### பஃவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2025 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட லாம் என பஃவ்ரல் அமைப்பின் நிறை வேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டி யாரச்சி தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் இரண் டாவது தடவையாகவும் ஒத்திவைப்ப தற்கு தேர்தல் ஆணைக்குழு எடுத் துள்ள தீர்மானம் குறித்து தெரிவிக்கை யிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிசபைத்தேர்தல் 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## V.R. கதிரேசு இரத்தினசபாபதி J.P

### (ஓய்வுநிலை விவாகப் பதிவாளர்)



நயினாதீவு 8ம் வட்டாரம் அறுகந்தறையை பிறப்பிடமாகவும் யாழ். திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு இரத்தின சபாபதி 11.04.2023இல் இறையடி சேர்ந்தார்.

அன்னார் நயினாதீவை சேர்ந்த அமரர்கள் கதிரேசு - அன்னபூரணி தம்பதிகளின் பாசமிகு மூத்த மகனும் அமரர்கள் முத்தையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் மூத்த மருமகனும், சண்முகவடிவின் அன்புக் கணவரும், ஓம்சக்தி (ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி), அமரர் ஆதித்தன், ஆதிசக்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநலசேவைகள் நிலையம், புத்தூர்), சிவசக்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் நல்லூர் பிரதேச சபை), மணிகண்டன் (அவுஸ்ரேலியா), ஞானசக்தி (இலங்கை வங்கி, வடபிராந்திய காரியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யசோதன் (சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், தாவரவியல்துறை, யா/பல்கலைக்கழகம்), லோகேந்திரன் (ஆசிரியர், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), சுதாகரன் (முகாமையாளர், இலங்கை வங்கி, வல்வெட்டித்துறை), இராகுலன் (மின் அத்தியட்சகர், இலங்கை மின்சாரசபை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலாந்தி, புராதனி, பார்கவி, பிரணவிகா, சாத்விகா,தாருக்சன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், சாரதாதேவி, சறோஜினிதேவி, சிவஞானசுந்தரம், அமரர் அருளானந்தசிவம், மலராஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கற்பகவடிவு, கிருஸ்ணவடிவு, மரகதவடிவு, திருச்செல்வம், தனலக்ஸ்மி மற்றும் மகாலிங்கசிவம், அமரர் கனகநாயகம் ஸ்ரீலதா, சுசீலாதேவி, பிரேம்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவானந்தராஜா, அமரர் அன்னலிங்கம், சுரேந்திரராசா, சத்தியேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


**30/6, நாலலடி லேன்,**
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.** (15241)

*தகவல்: குடும்பத்தினர்*
**077 6198548 / 0771446775**

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் திரு. வல்லிபுரம் சதாசிவம் செல்வராசா**



(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் – கமநல சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம் முன்னாள் தலைவர் – நாவலர் சனசமூக நிலையம் திருநாவலூர், முன்னாள் இணைப்பாளர் – நாவலர் இலவச பாலர் கல்வி நிலையம் திருநாவலூர்)

**திதி - பங்குனி மாத அபர பக்க அட்டமி**

ஆண்டொன்றாகியதோ ஆதாரமே உமை இழந்து
வேராக இருந்து எம்மை வளர்த்தீர்
ஊருக்காய் பல பணிகள் செய்தீர்
யாரப்பா உம்மைப்போல் எமக்கினி
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

**தவப்பேறு** 01.09.1949 **சிவப்பேறு** 25.03.2022

**திருநாவலூர்** (C-6350) **ஆறாத்துயருடன் குடும்பத்தினர்**

---

# வெப் இயந்திர இயக்குநர்கள் பயிலுநர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும்
அச்சக நிறுவனம் ஒன்றிற்கு

- வெப் இயந்திர இயக்குநர்கள்
  ( அனுபவம் உள்ளவர்கள் )
- பயிலுநர்கள்
  ( க.பொ.த.சா.தரம் )

யாழ். நகருக்கு அண்மையில்
இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு**
**076 097 3121** (அ)

---

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 - 03 - 1944

மறைவு 12 - 04 - 2023

## மார்க்கண்டு குமாரசாமி

### (ஓய்வுநிலை மருந்தாளர் - யாழ். போதனா வைத்தியசாலை)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு குமாரசாமி அவர்கள் நேற்று (12.04.2023) சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் நடராசா - சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகனும் சறோஜாவின் அன்புக் கணவரும் பிரபாகரன் (ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் கூட்டுத்தாபனம்), சிவாகரன் (பொறியியலாளர் நீர்ப்பாசன திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாமினி, சௌமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி சிவஞானவதி விஸ்வலிங்கத்தின் (ஓய்வு நிலை அதிபர்) பாசமிகு சகோதரரும் சாயிபிரியன் சாயிவர்சனா யாதவி, யாதவன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.04.2023 இன்று நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிரபாகரன்**
**077 760 9929** (15244)

*தகவல்:* குடும்பத்தினர்

---

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உப அலுவலகம்-தெல்லிப்பளை

விண்ணப்பதாரர் - சண்முகலிங்கம் ஜெயசீலன் (197713003986)
முகவரி - 1143 AB, திருநகர் தெற்கு, கிளிநொச்சி

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேச சபை தெல்லிப்பளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம்-13 அறிவொளி சனசமூக நிலைய வீதியில் அமைந்துள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் செந்தில்ராஜசர்மா லலிதாதாஸ் முகதாவில் 808 ஆம் இலக்கத்தில் 2022.10.12 ஆம் திகதி உறுதிப்படுத்தல் உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**
வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று 'தெல்லிப்பளை கிழக்கு இறையுமான கொருப்பளை' நிலப்பரப்பு 6 குழி 1.41 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் பி.புஸ்பராஜா அவர்கள் வரைந்த 8933/2022.09.14 ஆம் இலக்க.வரைபடத்தின்படி துண்டு - 01 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - இராமச்சந்திரனின் ஆதனம்
வடக்கு - கணேசலிங்கம் மற்றும் சண்முகராசாவின் ஆதனம்
மேற்கு - சங்கரலிங்கத்தின் ஆதனம்
தெற்கு - நவனீதனின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை சண்முகலிங்கம் ஜெயசீலன் எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** (C-6347)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான ஆதரவை மீண்டும் வெளிப்படுத்திய ஐ.எம்.எப்

(கொழும்பு)

**சர்வதேச நாணய நிதியமானது இலங்கைக்கு முதற்கட்டமான நிதியுதவியை வழங்கியுள்ளதுடன், அடுத்த கட்ட நிதியுதவியை வழங்குவதற்கு மீண்டும் தனது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளது.**

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தலைமையிலான இலங்கைத் தூதுக்குழுவினருக்கும் சர்வதேச நாணய நிதிய பிரதி நிதிகளுக்கும் இடையில் அமெரிக்காவில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில், இந்த இக்கட்டான தருணத்தில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான தனது ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளது என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர்ஜிவா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், இந்த கடினமான தருணத்தில் இலங்கைக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியம் உறுதியாகவுள்ளது.

நெருக்கடியை சமாளிக்க அனைவரும் ஒன்றிணைந்து தங்கள் பங்களிப்பை வழங்குவது மிகவும் அவசியமாகும் என ஜோர்ஜீவா இலங்கைக் குழுவிடம் கூறியுள்ளார். (நி)

# சீனாவில் இருந்து தண்டவாளங்கள் இறக்குமதி

(கொழும்பு)

சீனாவில் இருந்து 10000 ரயில் தண்டவாளங்களை இறக் குமதி செய்வதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி யின் கடன் உதவியின் கீழ் இந்த ரயில் தண்டவாளங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த மாத இறுதியில் குறித்த ரயில் தண்டவாளங்கள் நாட்டிற்கு கிடைக்கப் பெறும் என போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, ரயில் மார்க்கங்களை பராமரிப்பதற்கு அவசியமான ஆணிகள் உள்ளிட்ட பல்வேறு உதிரிப் பாகங்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் தண்டவாளங்கள் கிடைக்கப் பெற்றதன் பின்னர், ரயில் மார்க்கங்களை புனரமைக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என அதன் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (நி)

# பணிப்புறக்கணிப்பை கைவிட பல்கலை விரிவுரையாளர்கள் முடிவு

(கொழும்பு)

பணிப்புறக்கணிப்பை கைவிட்டு, எதிர்வரும் 17ஆம் திகதி முதல் கற்பித்தல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பல்கலைக் கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க சம்மேளன உறுப்பினர்களிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் ஆரம்பமான கலந்துரையாடல் நள்ளிரவு வரை நீடித்ததாக பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம் பன்னஹெக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம், கடந்த மாதம் 9 ஆம் திகதி முதல், தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கருகம்பனை பொது அமைப்புக்கள் நடத்தும் சித்திரை விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு சித்திரை விளையாட்டு விழா இன்று 13 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.01 மணிக்கு கருகம்பனை விளையாட்டு மைதானத்தில் கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக் கழக தலைவர் கோ.சத்தியசீலம் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்நிலையில் தயிர் முட்டி உடைத்து சறுக்குமரம் ஏறுதல், வினோத உடை, கயிறுழுத்தல், தலையணைச் சண்டை போன்றன இடம்பெறவுள்ளதுடன் மாபெரும் இன்னிசை நிகழ்வு, வான வேடிக்கைகளும் இடம்பெறவுள்ளன.

இதில் வலி.வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, 513 ஆவது படைப்பிரிவு பிரிகேடியர் எம்.றிஸ்வி றசிக், காங் கேசன் துறை பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெஹிகம, காங்கேசன்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி என்.ஜே.அதுகோரல, யாழ். தேசிய இளைஞர்கள் மன்ற உதவி இயக்குநர் திருமதி. வினோதினி சிறிமேனன், வலி. வடக்கு பிரதேச சபை செயலாளர் சு.சுதர்சன், ஜே/226 கிராம உத்தியோகத்தர் சி.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

### *கட்சி பேதங்களை மறந்து*

# புதிய நோக்குடன் பயணிக்க புத்தாண்டில் திடசங்கற்பம் கொள்வோம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

கடந்த வருடம் சித்திரைப் புத்தாண்டு உதயமான போது நாம் அனைவரும் மிகப்பெரிய நெருக்கடிக்குள் சிக்கியிருந்தோம். புத்தாண்டு கொண்டாட்டம் ஒருபுறமிருக்க, அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதே மிகப் பெரிய சவாலாக இருந்தது. ஆனால் இப்புத்தாண்டில் அனைவருக்கும் சிறு ஆறுதல் தருகின்ற சூழல் உருவாகியுள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த புத்தாண்டில், இதனை விடவும் சௌபாக்கியத்தையும் செழிப்பையும் ஏற்படுத்திக் கொள்ளவே நாம் முயற்சிக்க வேண்டும். நாம் அனைவரும் ஒருதாய் மக்களாக ஒரே பாதையில் பயணித்தால் அந்த இலக்கு சாத்தியமாகும்.

இன, மத, கட்சி, நிற பேதங்களை புறந்தள்ளிவிட்டு புதிய நோக்குடன் முன்னோக்கிப் பயணிக்க இந்த சித்திரைப் புத்தாண்டில் திடசங்கற்பம் கொண்டால் இந்த புத்தாண்டு மட்டுமன்றி, எதிர் காலத்தையும் நலம் மிக்கதாக அமைத்துக்கொள்ள முடியும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (நி)

# சப்பாத்து, புத்தகப்பைகளின் விலைகளை குறைக்க தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பைகள் மற்றும் சப்பாத்துகளின் விலைகளை விரைவாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளமைக்கு அமைவாக, உள்நாட்டு சந்தையில் பாடசாலைப் புத்தகப்பைகள் மற்றும் சப்பாத்துகளின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய வலியுறுத்தியுள்ளார்..

இது தொடர்பில் ஆராய்ந்து ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சந்தை மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்திற்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

புத்தகப்பைகள் மற்றும் சப்பாத்துகளின் விலைகள் குறைவடையாத பட்சத்தில் அது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலைகளில் புதிய கல்வி ஆண்டு ஆரம்பித்துள்ள நிலையில் புத்தகப்பைகள் மற்றும் சப்பாத்துகளை கொள்வனவு செய்வதற்கு பெற்றோர்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்குவதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி)


நாளை தேர் உலா வரும்
யாழ்- அத்தியடி பிள்ளையார்



வசந்தமண்டப பூசை - காலை 08.00 மணி
தேருக்கு எம்பெருமான் எழுந்தருளல் - காலை 09.00 மணி
கோயில் நிர்வாகசபை
அத்தியடி இந்து இளைஞர் சங்கம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வியாஸ்காந்த் விரைவில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடுவார்

## குமார் சங்கக்கார



ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு இலங்கையின் இளம் வீரர் விஜயகாந்த் வியாஸ்காந்த் அளித்த ஆதரவிற்காக முன்னாள் இலங்கை கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார பாராட்டு தெரிவித்துள்ளார்.

லங்கா பிரீமியர் லீக் தொடரில் லைக்காவின் ஜப்னா கிங்ஸைப் பிரதிநிதித்துவப் படுத்திய விஜயகாந்த் வியாஸ்காந்த், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் வலைப் பந்துவீச்சாளர்களாக உள்ளார்.

இந்நிலையில் ராஜஸ்தான் அணியில் இருந்து விஜயகாந்த் வியாஸ்காந்த், விலகுவதாக குமார் சங்கக்கார அறிவித்துள்ளார்.

இளம் கிரிக்கெட் வீரரான விஜாஸ்காந்த் சிறப்பாக பந்து வீசியதாகவும் அவர் பல விடயங்களை இதன்போது கற்றுக்கொண்டதாகவும் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதேவேளை வியாஸ்காந்த் விரைவில் இலங்கை அணியை பிரதிநிதித்துவப் படுத்தி விளையாடுவார் என தான் நம்புவதாகவும் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் இந்தியன் பிரீமியர் லீக்கில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக குமார் சங்கக்கார செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# விராட்கோலியின் சாதனையை கில் முறியடிப்பார்-ரவிசாஸ்திரி



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ஒரு சீசனில் அதிக ஓட்டங்கள் குவித்தவர் பெங்களூரு அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி. அவர் 2016 ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரில் 16 ஆட்டங்களில் ஆடி 4 சதம் உட்பட 973 ஓட்டங்கள் சேர்த்தார். இந் நிலையில், கோலி சாதனையை முறியடிக்க யாருக்கு வாய்ப்புள்ளது என இந்திய முன்னாள் வீரரும், வர்ணனையாளருமான ரவி சாஸ்திரியிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் கூறியதாவது.

என்னைப் பொறுத்தவரை விராட் கோலியின் சாதனையை தகர்ப்பது மிகவும் கடினம். ஏனெனில் ஒரு சீசனில் 900 ஓட்டங்களுக்கு மேல் எடுப்பது எளிதான விடயம் அல்ல. ஆனால் இச்சாதனையை முறியடிக்கும் வாய்ப்பு இருந்தால் அது ஒரு தொடக்க ஆட்டக்காரரால் தான் முடியும். ஏனெனில் தொடக்க ஆட்டக்காரருக்கு தான் அதிகமான ஆட்டங்களில் விளையாட வாய்ப்பு கிடைக்கும்.

அந்த வகையில் கோலியின் சாதனையை முறியடிக்கும் திறமை குஜராத் டைட்டன்ஸ் வீரர் ஷுப்மன் கில்லுக்கு இருப்பதாக கருதுகிறேன்.

நடப்பு ஐ.பி.எல் தொடரில் ஷுப்மன் கில் இதுவரை 3 ஆட்டத்தில் ஆடி 116 ஓட்டங்கள் எடுத்துள்ளார். (4)

# பார்சிலோனா-ஜிரோனா போட்டி சமநிலையில் நிறைவு

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக் கிடையிலான லா லிகா தொடரில், நேற்று முன்தினம் அதிகாலை நடைபெற்ற ஜிரோனாவுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா சமப்படுத்தியது.

அந்தவகையில் லா லிகா புள்ளிகள் பட்டியலில் 72 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா காணப்படுகின்றது. நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் 59 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும் 57 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 51 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் றியல் சொஸைடட்டும் காணப்படுகின்றன. (4-6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2806

**ரூபினி**

நம்பு ப்ரோ... 150 மில்லியன் கிலோ மீற்றர் தொலைவுல தான் இருக்கேன்...




ஹேய்...ஹேய்...நடிக்காத நீ எங்க வீட்டு மாடில தான் இருக்கனு எனக்கு தெரியும்...

**உதயநிலா**

உங்க ஊர் பக்கமெல்லாம் வெயில் எப்படி இருக்கு ரமேஷ்...?



மாவு இருந்தா தோசை சுடலாம்
அந்த அளவுக்கு ரோடெல்லாம் கொதிக்கிது கோபி

**சர்மிலன்**

சீனா,ஜப்பான்,தென்கொரியா,பிறேசில், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் கொரோனா தொற்று திடீர் அதிகரிப்பு-செய்தி




புத்தாண்டு,பொங்கல்,தீபாவளி ஞாயிற்றுக்கிழமைல வருதேன்னு வரத்தப்படாதே,பாக்கெட்ல நிறைய லீவு வச்சுருக்கேன்..

**தேவகி**

தாங்கள் வந்த நோக்கம்...?




Account ல் பணமே இல்லாமல் பணம் எடுப்பது போல் நடித்து சற்று நேரம் AC காற்று வாங்கலாம் என வந்தேன்..

**நியூட்டன்**

2024 வரப்போகுது ஓவர் ஓவர்...!




நானும் பின்னாடியே வந்துகிட்டு இருக்கேன் ஓவர் ஓவர்...!

**சிந்துஜன்**

புது வருஷம் வரும்னு வெயிட் பண்ணா...



புது வைரஸ் வருது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் மறுசீரமைப்பு செயன்முறைக்கு சீனா ஆதரவளிக்கும்-நந்தலால் வீரசிங்க

(கொழும்பு)

நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயன்முறைக்கு சீனா ஆதரவளிக்கும் என எதிர்பார்ப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மறுசீரமைப்பு பேச்சுக்கள் தொடங்கியுள்ளன என்றும் முடிந்த வரை விரைவில் அதைச் செய்வதை உறுதி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு உத்தியோகபூர்வ மற்றும் வர்த்தக கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகளை விரைவாக முடிப்பதற்கும் இலங்கை எதிர்பார்த்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள அவர், ப்ளூம்பெர்க் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாரிஸ் கிளப் உறுப்பினர்கள், சீனா மற்றும் இந்தியா போன்ற இருதரப்பு கடனாளர்களிடமிருந்தும் ஆதரவை தாம் பெறுவோம் என மார்ச் மாதம் நந்தலால் வீரசிங்க தெரிவித்திருந்தார்.



இதேநேரம் ஜப்பான், பிரான்ஸ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு செயல்முறையை இன்று வோஷிங்டனில் அறிவிக்க திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இலத்திரனியல் சந்தைப்படுத்தல் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விதாதா வள நிலையமும் திறன் அபிவிருத்திப் பிரிவும் இணைந்து உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கான இலத்திரனியல் சந்தைப்படுத்தல் வாய்ப்பினை whatsApp, Viber, Facebook போன்ற சமூகவலைத் தளங்களினூடாக ஏற்படுதிக் கொடுப்பதற்கான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 தொடக்கம் 12.30 வரை விதாதா வள நிலையத்தில் நடத்தப்படவுள்ளது.

இவ் இலத்திரனியல் சந்தைப்படுத்தல் மூலம் அதிக சந்தை வாய்ப்புள்ள உள்ளூர் உற்பத்திகளுக்கு புதிய வாடிக்கையாளர்களை உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் உள்ள புலம் பெயர் தமிழர்களையும் நேரடியாகப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே இப் பயிற்சிப்பட்டறையில் இணைந்து பயன்பெற விருப்பமுடையவர்கள் தங்களின் பதிவினை 021226 4958 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக 18.04.2023 ஆம் திகதிக்கு முன்னதாக அலுவலக நாட்களில் பதிவு செய்ய முடியும் என கரவெட்டி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (4)

## இலங்கை மத்திய வங்கியின்

# பெட்டகத்திலிருந்த 50 லட்சம் மாயம் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பெட்டகத்திலிருந்து 50 இலட்சம் ரூபாய் காணாமல் போயுள்ளதாக கோட்டை பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக கோட்டை பொலிஸார் நேற்று புதன்கிழமை காலை மத்திய வங்கிக்கு சென்றுள்ளனர்.

மத்திய வங்கியின் பல அதிகாரிகளினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த சம்பவம் தொடர்பாக பலரிடம் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# அதிக நேரம் 'ஸ்மார்ட் போன்' பாவிப்பதால் முதுகு வலியால் பாதிக்கப்படும் சிறார்கள்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(பிரேஸில்)

ஸ்மார்ட் போன்கள் அதிகம் பயன்படுத்தும் சிறார்கள் முதுகு வலியால் பாதிக்கப்படுவதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகி உள்ளன.

பிரேஸிலை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், 14 முதல் 18 வயதுடைய சிறார்களிடம் ஆய்வுகள் நடத்தினர்.

அதில் ஒருநாளைக்கு சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக ஸ்மார்ட் போன்கள் பயன்படுத்தும் சிறார்கள் மற்றும் இளைஞர்களுக்கு, முதுகுவலி பிரச்சினைகள் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது.

மேலும் ஸ்மார்ட்போன் மோகத்தால் சிறுவர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுவதாகவும் அந்த ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# 17 போலித் தாள்களுடன் ஒருவர் கைது-அச்சிட்டவரும் சிக்கினார்

(கொழும்பு)

ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்களை வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட ஒருவரும், அதனை அச்சிட்ட நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்பாந்தோட்டை - கட்டுவன பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுவன பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் கட்டுவன - பிந்தனையில் அமைந்துள்ள சூதாட்ட நிலையம் ஒன்று நேற்று முன்தினம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டதுடன், போலி நாணயத்தாள்களை பயன்படுத்தி சூதாட்டத்தில் ஈடுபட்ட நபரொருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 17 போலி 5000 ரூபா நாணயத் தாள்களை பொலிஸார் மீட்டனர்.

குறித்த சந்தேகநபரிடம் நடத்திய விசாரணைக்கமைய, கட்டுவன நகரில் போலி நாணயத்தாள்களை அச்சிட்ட நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

அதன்போது, போலி நாணய தாள்களை அச்சடித்ததாக கருதப்படும் இயந்திரம் மற்றும் கணினி ஆகியவற்றையும் பொலிஸார் மீட்டனர்.

போலி நாணயத்தாள்களும் புழக்கத்தில் விடப்படுகின்றன. எனவே, அதுகுறித்து அதிக அவதானத்துடன் இருக்க வேண்டும்.

அத்துடன் திட்டமிட்டவாறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடும் குழுவினரின் நடமாட்டம் உள்ளதால், பொதுமக்கள் பெறுமதியான ஆபரணங்களை அணிந்துசெல்ல வேண்டாம் என்பதுடன் பணப்பையை கவனமாக வைத்திருக்க வேண்டும் என்றும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# ஒரு லட்சம் குரங்குகள் சீனாவுக்கு-விவசாய அமைச்சு

(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்து வரும் குரங்குகளின் எண்ணிக்கைக்கு தீர்வொன்றை வழங்கும் வகையில், நாட்டிலுள்ள குரங்குகளை சீனாவில் உள்ள மிருகக்காட்சிச்சாலைகளுக்கு வழங்குமாறு சீன பிரதிநிதிகள் குழுவொன்று விவசாய அமைச்சிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இந்தக் கோரிக்கைக்கு அமைய, முதற்கட்டமாக ஒரு இலட்சம் குரங்குகள் சீனாவிற்கு வழங்கப்படவுள்ளன.

குரங்குப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் இதுவரை மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ள நிலையிலேயே, இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# இராசிபலன்

13.04.2023
பங்குனி 30, வியாழக்கிழமை
அட்டம் பின்னிரவு 12.29 மணிவரை

பூராடம் முற்பகல் 9.49 மணிவரை
சுபநேரம் -7.36-9.06 மணிவரை
இராகுகாலம்-1.36-3.06 மணிவரை

சந்திராஷ்டமம் - மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்




பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், தடைகள் அகன்று தனவரவு கிடைக்கும் வாய்ப்புண்டு.




உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.




பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வழிபாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.




பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சிறப்பான நாள்.




குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விலகிச் சென்றவர்கள் திரும்பி வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும்.




பேச்சில் கனிவு பிறக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும்.




மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, உணவில் கட்டுப்பாடு தேவை, இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும்.

புது வேலைக்காரன் சுறுசுறுப்பு இருபது நாட்களுக்குத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### யாழ்.நகர் பகுதிகளில்

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத கருவாட்டுக் கடை வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கருவாட்டு கடைகள் யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்களால் நேற்று திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பாலமுரளியின் அறிவுறுத்தலின் பிரகாரம் யாழ்.நகர் பொதுச் சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவன் மற்றும் மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது தெருவோரம் தூசுக்கள், மாசுக்களால் மாசடையக்கூடிய வகையில் கருவாடுகள் வைத்திருந்த கடை உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர். தெருவோரம் கருவாடுகளை வைத்து விற்பனை செய்வதாயின் கண்ணாடி பெட்டிக்குள் வைத்து விற்பனை செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் கருவாடுகளை தூசு படியும் வகையிலும், அழுக்கான கறள் படிந்த கம்பிகளிலும் குத்தி தொங்கவிடப்பட்டிருந்த கடை உரிமையாளர்களுக்கும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டது.

கருவாடுகள் அனைத்தையும் பொலித்தீனால் மூடி தூசுக்கள் படாதவாறு காட்சிப்படுத்துமாறும் பொதுச் சுகாதார பரிசோ தகர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேற்படி குறைபாடுகள் நிவர்த்தி செய்வதற்கு இரண்டு வாரகால அவகாசம் வழங்கப்பட்டதுடன், கால அவகாசத்தின் பின்னரும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யாத வர்த்தகர்களிற்கெதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பொதுச் சுகாதார பரிசோதகர்களால் தெரிவிக்கப்பட்டது. (4-6-33)

# தென்னைகளில் வெள்ளை ஈ கட்டுப்படுத்த அறிவுறுத்தல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தென்னைகளில் வெள்ளை ஈ தாக்கம் அதிகரித்து வருவதாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

குறித்த நோய்த்தாக்கத்தை கட்டுப்படுத்துவற்கான சில அறிவுறுத்தல்களையும் அவர் பொதுமக்களுக்கு வழங்கியுள்ளார். அந்த வகையில்,

வெள்ளை ஈ காணப்படும் பயனாளிகள் உடனடியாக கமநலசேவை திணைக்களத்திற்கு சென்று பொறுப்பாகவுள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தங்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் தங்கள் பிரதேசத்திலுள்ள கற்பகதரு சங்கத்தில் இணைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உங்கள் வளவில் உள்ள தென்னை உங்களுடைய தென்னை என்ற எண்ணத்தில் உங்களுக்கு தரப்பட்ட அறிவுறுத்தலை பின்பற்ற நடவடிக்கை எடுக்கவும்.

உங்கள் வளவிற்கு வரும் எங்களுடைய வேலையாட்களுக்கு நீர், மருந்து, ஒரு மரத்திற்கு 1/4 கிலோ அவிக்காத கோதுமை மா, 1/4 கிலோ பச்சை அரிசிமா என்பவற்றையும் மற்றும் உயரமான மரத்திற்கு அடிப்பதற்கு தேவையான தடி, அவர்களுக்கான கொடுப்பனவு இயந்திரத்திற்கு தேவையான எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மருந்து விசிறும் போது ஏற்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளை தாங்களே பொறுப்பேற்க வேண்டும்.

தங்கள் வளவில் பாதிக்கப்பட்ட தென்னை மரத்திற்கு முதல் தடவையாக நீர், மருந்து விசிறுதல் பொறுப்பானது, தென்னை பயிர்ச்செய்கை சபையால் செய்து தரப்படும். அத்துடன் 2 கிழமைக்குப் பின்னர் தொடர்ச்சியாக தாங்களே நீர் மற்றும் மருந்து விசிறும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். நீர் விசிறும் இயந்திரத்தை தென்னை பயிர்ச்செய்கை சபையிடம் வாடகைக்கு பெற்றுக் கொள்ள முடியும் போன்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (4-6)

# சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலய திருவிழாவை நடத்துங்கள் பக்தர்கள் கோரிக்கை



(அராலி)

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவினை நடத்துமாறு கோரி நேற்று பக்தர்களால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தை முன்னெடுத்த பக்தர்கள் கருத்து தெரிவிக்கையில்,

தனிப்பட்ட காரணத்துக்காக ஒரு சிலர் இந்த ஆலயத்தின் திருவிழாவினை தடுக்கிறார்கள்.

இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கும் உள்ளது. நீதிமன்ற வழக்கானது எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெற உள்ளது. ஆனால் கொடியேற்றமானது பதினெட்டாம் திகதி நடைபெற வேண்டும்.

இந்த திருவிழாவினை நிறுத்துவதால் பலர் பாதிக்கப்படுகின்றனர். ஆலயத்தின் திருவிழா சரியான நாட்களில் ஒழுங்காக நடைபெறாமல் விட்டால் அது அந்த கோவிலைச் சார்ந்த அனைத்து பக்தர்களுக்கும் ஒரு தீங்காகவே காணப்படும்.

அதனால் பாதிப்புகளும் ஏற்படும். எனவே இந்த திருவிழாவினை வழமை போல் நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் பங்களிக்க வேண்டும் என கூறினர்.

இந்த போராட்டத்தில் சைவ மதகுருக்கள், உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகள் என பலரும் கலந்து கொண்டனர். (4-6-33)

## மானிப்பாய் மருதடி விநாயகருக்கு நாளை தேர்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது. மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (4-6)

# சதுரங்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அமரர்.ஆறுமுகம் உதயசங்கர் ஞாபகார்த்தமாக தம்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் சதுரங்கச் சுற்றுப் போட்டி - 2023 எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை தம்பசிட்டி சதாவ [illegible] [illegible] பெறவுள்ளது. (4-6)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை சத்திரசிகிச்சையினை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான நோயாளர்களைத் தெரிவு செய்யும் அடுத்த கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-6)



வரணி சமுர்த்தி வங்கிக்குட்பட்ட பிரிவுகளில் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களது உற்பத்திப்பொருள் கண்காட்சியும் விற்பனையும் பங்குனித் திங்கள் தினமான கடந்த 10 ஆம் திகதி வரணி சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்றது.

(படம்- மகாலிங்கம்)

# புத்தாண்டைக் கொண்டாட பொதுமக்கள் ஆர்வம்



(யாழ்ப்பாணம்)

பிறக்கவிருக்கும் தமிழ், சிங்கள புதுவருடப்பிறப்பினை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் மக்கள் புத்தாடைக் கொள்வனவில் ஈடுபடுவதை அவதானிக்க முடிக்கின்றது.

இந்த வருடம் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் பொருட்களின் விலைகள் அதிகரித்து இருக்கின்றமை காண முடிவதாகவும் வருடம் ஒரு முறை வரும் பண்டிகை என்ற படியால் புத்தாண்டு பண்டிகையினை கொண்டாடவுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய கப்பல் சேவை தொடர்பில் உள்ளார்ந்த முரண்பாடுகள் - இந்திய இணையம் செய்தி வெளியீடு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை தொடர்பில் இரண்டு நாடுகளும் ஆர்வம் காட்டி வருகின்றன.

எனினும், தமிழ்நாட்டு அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ நிலைப்பாடுகளிலும், இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடுகளிலும் உள்ளார்ந்த முரண்பாடு உள்ளதாக இந்திய இணையம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இரண்டு தரப்புக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதை தொடர்பிலேயே இந்த முரண்பாடு நிலவுகிறது. இலங்கையின் கப்பல் போக்குவரத்து, துறைமுகங்களின் அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வாவின் கூற்றுப்படி, ஏப்ரல் 29 ஆம் திகதியன்று காரைக்காலுக்கும் காங்கேசன்துறைக்கும் புதுச்சேரி ஊடாக இந்த சேவை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், தமிழக தரப்பில் இராமேஸ்வரத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான வழித்தட யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பின்னர் புதுச்சேரிக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இன்னும் இந்த வழித்தட யோசனைகள் இறுதி செய்யப்படவில்லை. இந்தநிலையில், இந்தப் பயணிகள் கப்பல் சேவையை அதானி குழுமம் பொறுப்பேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இந்த சேவை இந்த மாத இறுதிக்குள் இல்லாவிட்டாலும், இந்த ஆண்டு இறுதிக்குள் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இருப்பதாக இந்திய இணையத்தளம் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அநுரகுமார தென்கொரியா விஜயம்



(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, நாளை வெள்ளிக்கிழமை தென்கொரியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். தென்கொரியாவில் தங்கியுள்ள இலங்கையர்களால் விடுக்கப்பட்ட அழைப்பையேற்றே அவர் அங்கு செல்கின்றார்.

தென்கொரியாவில் குடியேறியுள்ள இலங்கையர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்தே விடுத்த அழைப்பையேற்றே அநுர அங்கு செல்கின்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன், இலங்கையின் நடப்பு விவகாரம் பற்றி அவர் சிறப்புரையாற்றவுள்ளார். (நி)

# சவுதி அரேபியாவில் வேலைவாய்ப்பின்றி சிக்கித் தவிக்கும் இலங்கையர்கள்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் றியாத் நகரத்திற்கு அருகாமையில் உள்ள கட்டடத்தில் 35 இலங்கையர்கள் வேலைவாய்ப்பு இன்றியும் ஒரு வேளை உணவிற்கு வழி இன்றியும் பல மாதங்களாகத் தங்கியுள்ளனர்.

வெள்ளவத்தையில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தால் வேலை வாய்ப்புக்காக வெளிநாடு சென்ற இவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை.

சிலருக்கு கிடைத்தாலும் அவை தற்காலிகமாகவே கிடைக்கப் பெற்றுள்ளன.

இதுவரை இவர்களுக்கு உரிய முறையிலானஒரு வேளை உணவு கூட வழங்கப்படவில்லை. இதனால் மற்றவர்கள் சாப்பிட்ட எஞ்சிய உணவுகளையே உண்கின்றனர்.

இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் சவுதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அங்கு உள்ள 35 பேரில் 6 பேர் மீண்டும் இலங்கைக்கு செல்ல விருப்பம் தெரிவித்ததாகவும் ஏனையவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனரத்யாப்பா தெரிவித்துள்ளார். (நி-6)

## வரிக்கொள்கையைப் பயன்படுத்தி

# மாணவர்களின் எதிர்காலத்தை அழித்து விடக் கூடாது-ஐ.தே.க

(கொழும்பு)

மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆரம்பிக்க வேண்டும்.

வரிக்கொள்கையை பயன்படுத்திக்கொண்டு மாணவர்களை பழிவாங்கக்கூடாது என ஐக்கிய தேசிய கட்சி செயற்குழு உறுப்பினர் சாந்தினீ கோங்கஹகே தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொழிற்சங்க போராட்டத்தை கடந்த ஒருமாத காலமாக முன்னெடுத்து வருகின்றனர்.

வரிக்கொள்கை என்பது அனைவருக்கும் பொதுவானது. அது பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு மாத்திரமானதல்ல. இந்த வரிக்கொள்கையில் அரச துறையில் 5 வீதமானவர்களே உள்வாங்கப்படுகின்றனர்.

அவ்வாறு இருக்கையில் ஆசிரியர் சங்கம்,பல்கலைக்கழக பேராசிரியர் சங்கம் இதனை முன்னிலைப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் போராட்டம் காரணமாக கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது.

விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் கலந்து கொள்ளும் மதிப்பீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகள் மற்றும் கொடுப்பனவுள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

என்றாலும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆயிரத்து 400 பேர் வரையானவர்கள் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் கலந்து கொள்ளாமல் இருந்து வருகின்றனர்.

இவர்களின் இந்த நடவடிக்கையால் தற்போது கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை இரண்டு வாரங்களுக்கு பிற்போடப்பட்டிருக்கிறது.

எனவே அரசியலுடன் சம்பந்தமில்லாத மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் தங்களது கடமையை நிறைவேற்ற முன்வரவேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# நிலக்கரிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது

## அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

நிலக்கரிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர உறுதியளித்துள்ளார்.

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்துக்கு தேவையான 22 நிலக்கரி கப்பல்களை இலங்கை நிலக்கரி நிறுவனம் கொள்வனவு செய்துள்ளது.

அதன்படி 23 ஆவது கப்பல் இறக்கப்படுகிறது. இந்நிலையில் மின்சார சபையினால் கணிக்கப்பட்டுள்ள உற்பத்தித் திட்டத்தின் படி 30 நிலக்கரிக் கப்பல்கள் தேவைப்படுவதுடன் அவற்றில் 24, 25 மற்றும் 26 கப்பல்கள் ஏற்கனவே புத்தளத்தை வந்தடைந்துள்ளன.

27, 28 மற்றும் 29 ஆகிய கப்பல்கள் மே 1 ஆம் திகதிக்கு முன் வந்து சேர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 30 ஆவது கப்பல் மே முதல் வாரத்தில் வரவுள்ளது.

இவ்வாறாக கடந்த காலங்களில் தொழிற்சங்கங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பொய்யான. தவறான பிரசாரங்கள் தோல்வியடைந்துள்ளன.

லக்விஜய மின் உற்பத்தி நிலையம் அதிகபட்ச கொள்ளளவில் இயங்குவதற்கு தேவையான அளவு நிலக்கரியை பெற முடியும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இன்றும் நாளையும் மதுபானக் கடைகள் மூடப்படும்

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள மதுபான கடைகள் இன்றும் நாளையும் மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோத மதுபானங்களை சுற்றிவளைக்கும் விசேட நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலால் வரி குற்றங்கள் தொடர்பான தகவல்களை வழங்க 1913 என்ற விசேட தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தெரிவிக்க முடியும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 380 | 320 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 170 | 180 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 280 | 250 |
| தக்காளி | 200 | 150 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 200 |
| கோவா | 150 | 160 | 140 | 200 |
| கரட் | 140 | 180 | 180 | 240 |
| பூசணி | 60 | 70 | 60 | 50 |
| புடோல் | 140 | 120 | 140 | 160 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 120 | 130 | 140 |
| பாகற்காய் | 300 | 300 | 300 | 400 |
| வெண்டக்காய் | 250 | 250 | 140 | 250 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 200 | 150 | 180 | 250 |
| லீக்ஸ் | 250 | 240 | 280 | 350 |
| பீற்றூட் | 120 | 150 | 140 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 280 | 350 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 800 | 1000 |
| போஞ்சி | 280 | 300 | 300 | 350 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 200 | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 300 | 250 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 110 | 100 | 70-110 |
| இராசவள்ளி | 300 | 350 | 280 | 250 |
| வெங்காயப்பூ | -- | 180 | 240 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 110 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | 150 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 151





"அது எப்படி சாத்தியம்? புலியின் வயிற்றுக்குள்ளே போனது திரும்பவும் வருமா? சோழ சாம்ராஜ்யத்தில் சேர்ந்த அரசு திரும்பக் கிடைக்குமா?"

"கிடைக்கும்படி செய்ய என்னால் முடியும்."

"அம்மணி! வேண்டாம்! இராஜ்யம் ஆளும் ஆசை எனக்கு எப்போதும் கிடையாது. கொஞ்சம் இருந்ததும் இன்றைக்குச் சுந்தர சோழ சக்கரவர்த்தியைப் பார்த்த பிறகு அடியோடு போய்விட்டது. இம்மாதிரி பிறர் கையை எதிர்பார்த்துச் சக்கரவர்த்தியாயிருப்பதைக் காட்டிலும் மறுநாள் உணவு எங்கே கிடைக்கும் என்று தெரியாத சுதந்திர மனிதனாயிருப்பதே மேல்."

"என்னுடைய கருத்தும் அது தான்!" என்றாள் நந்தினி. பிறகு ஏதோ மறந்து போன விடயத்தை ஞாபகப்படுத்திக் கொண்டவள் போல், "சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் உம்மை எதற்காக தேடுகிறார்கள்?" என்று கேட்டாள்.

"தங்களுடைய தாதிப் பெண்ணைப் போல் அவருக்கும் என் பேரில் சந்தேகம் உண்டாகி விட்டது."

"என்ன சந்தேகம்?"

"பனை இலச்சினை உள்ள முத்திரை மோதிரம் என்னிடம் எப்படி வந்தது என்று."

நந்தினியின் முகத்தில் பயத்தின் சிறிய சாயல் தென்பட்டது. "மோதிரம் எங்கே?" என்று திடுக்கிட்ட குரலில் கேட்டாள்.

"இதோ இருக்கிறது. அம்மணி! இலேசில் அதைப் போக்கடித்து விடுவேனா?" என்று கூறிக் கொண்டே மோதிரத்தை எடுத்துக் காட்டினான்.

"இது உம்மிடம் இருப்பது அவருக்கு எப்படித் தெரிந்தது?" என்று நந்தினி கேட்டாள்.

"சுந்தர சோழ சக்கரவர்த்தியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை என் மனத்தில் நெடுநாளாக இருந்தது. அதற்கு இந்த முத்திரை மோதிரத்தை உபயோகப்படுத்திக் கொண்டேன். பார்த்து முடிந்த பிறகு இந்த மோதிரம் என்னிடம் எப்படி வந்தது என்று கோட்டைத் தளபதி கேட்டார்"

"நீர் என்ன சொன்னீர்?" என்று நந்தினி வினாவிய குரலில் திகில் தொனித்தது. "தங்கள் பெயரைச் சொல்ல வில்லை, அம்மணி! பெரிய பழுவேட்டரையர் கொடுத்தார் என்று சொன்னேன். கடம்பூர் மாளிகையில் கொடுத்தார் என்றும் சொன்னேன்"

நந்தினி பெருமூச்சு விட்டாள். அவள் முகத்திலும் குரலிலும் இருந்த திகில் நீங்கியது.

"நீர் சொன்னதை அவர் நம்பினாரா?" என்று கேட்டாள்.

"முழுதும் நம்பியதாகத் தெரியவில்லை. அதனால்தானே என்னைப் பின்தொடரும்படி ஆட்களை விட்டிருக்க வேண்டும்? தமையனார் திரும்பி வந்ததும் என்னை அவர் முன்னால் நிறுத்தி உண்மையை அறிய எண்ணியிருக்கலாம்!" என்றான் வந்தியத்தேவன்.

நந்தினி புன்னகை புரிந்து, "பெரிய பழுவேட்டரையரிடம் நீர் பயப்பட வேண்டாம். அவர் உம்மைக் கடித்துத் தின்றுவிடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள்.

"அம்மணி! தனாதிகாரியின் பேரில் தங்களுடைய செல்வாக்கு எவ்வளவு என்பது உலகம் அறிந்த செய்தி. ஆனால் எனக்கு வெளியில் அவசர காரியம் இருக்கிறது. ஆகையினால்தான் தப்பிச் செல்லத் தங்கள் உதவியைக் கோருகிறேன்."

"அப்படி என்ன அவசர வேலை இருக்கிறது?" "எத்தனையோ இருக்கிறது. உதாரணமாக ஆழ்வார்க்கடியாரைப் பார்த்துத் தங்கள் மறுமொழியைச் சொல்ல வேண்டும். அவருக்கு என்ன சொல்லட்டும்?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மந்திரியான காக்கை அண்ணாச்சி

(நேற்றைய தொடர்ச்சி)



"பன்றியார் சொன்னது போல் அவர் மலக்கழிவுகளை உண்டு சுகாதாரத்திற்கு வழி செய்கிறார் என்பது வாஸ்தவம் தான். பட்டாம் பூச்சியார் சுத்தமான தேனைக் குடிக்கிறார். பார்க்க அழகாக கவர்ச்சியாக இருக்கிறார் அதுவும் சரிதான்"

நரியார் சொன்னதை எல்லா பறவைகளும் மிருகங்களும் உன்னிப்பாய் கவனித்தன.

"காக்கையாரும் பன்றிகளைப் போல அசுத்தங்களை உண்டு சுத்தப்படுத்துகிறார். இது நமக்குத் தெரியும்" என்று சொல்லி விட்டு நிறுத்தியது. முக்கியமான செய்தியைச் சொல்லும் போது நரியார் இப்படி நின்று நிதானித்துப் பேசுவார்.

"சுத்தம் என்பது தானும் சுத்தமாக இருக்க வேண்டும். தனது சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இந்த [illegible]ரில் இதற்குப் பொருத்தமானவர்?" என்ற கேள்வியுடன் மீண்டும் ஒரு முறை தனது பேச்சை நிறுத்தினார்.

யானையார் கூட தனது காதுமடல்களை அசைக்காமல் கேட்டுக் கொண்டிருந்தார்.

"பன்றியாரின் [illegible]பையும், உறைவிடத்தையும் சுத்தமானது என்று சொல்ல முடியாது. மலத்தில் படுத்து உறங்கும் பட்டாம் பூச்சியாரும் சுகாதாரச் சூழலில் வாழ்கிறார் என்று சொல்ல முடியாது. ஆனால்" கொக்கி போட்டு நிறுத்தினார் நரியார்.

இம்மியளவு இலை விழுந்தால் கூட இடிச் சத்தம் போல் கேட்கும் அளவுக்கு அமைதி.

மீண்டும் நரியார் ஆரம்பித்தார்.

"காக்கையார் உடல் சுத்தம். உள்ளம் சுத்தம். அவர் சுற்றுப் புறமும் சுத்தமானது. நாள் தவறினாலும் அவர் குளியல் தவறாது.

இனி ஓட்டுப் போடுவது உங்கள் சுதந்திரம்" என்று சொல்லி விட்டு நடந்தார் நரியார்.

இப்போது எல்லோருக்கும் ஒரு தெளிவான வழியைக் காட்டியது போல் தமக்குள் பேசிக் கொண்டனர்.

சற்று நேரத்தில் ஓட்டெடுப்பு நடந்தது. செந்நாய் அமைதிப் படை தில்லுமுல்லுகள் நடக்காமல் பார்த்துக் கொண்டன.

ஓட்டுகள் எண்ணப்பட்டன. காக்கையார் சுத்தம் சோறுபோடும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் தேர்தலில் ஜெயிக்கவைக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா? என்று சபாநாயகர் குரங்கார் ஜோக் அடிக்க எல்லோரும் சிரிக்க குமுளி மலைக் காடே அதிர்ந்தது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை தீமை செய்வதை நிறுத்துங்கள்.
~டால்ஸ்டாய்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாராலும் கவனிக்கப்படாத அவல மரணங்கள்

புதினத்தாள்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் என எதை எடுத்தாலும் அவல மரணங்களே முதன்மைச் செய்திகளாகியுள்ளன.

வாகன விபத்தால் ஏற்படுகின்ற மரணங்கள் நீங்கா இடத்தைப் பிடித்துவிட்டது.

தடுப்பாரும் இல்லை தட்டிக்கேட்பாரும் இல்லை என்பதுபோல வாகன விபத்து மரணங்கள் நாள் தோறும் அருமந்த மனித உயிர்களைக் காவுகொள்கின்றன.

இந்த மரணங்கள் தொடர்பில் வாரம், மாதம், ஆண்டு எனக் கணக்கெடுத்தால் உயிரிழப்புகளுக்கான காரணத்தில் வாகன விபத்துக்களே முதலிடத்தைப் பிடிக்கும்.

எனினும் இது தொடர்பில் ஆளுநர் தலைமையிலோ அன்றி மாவட்டச் செயலர்களின் தலைமையிலோ எந்தச் கூட்டமும் நடந்ததாகத் தெரியவில்லை.

வாகன விபத்தில் மரணமடைந்துவிட்டால், அதுபற்றி ஒரு சில மணித்தியாலங்களுடன் அந்தக் கதை நின்றுபோகும்.

அறிந்தவர்கள் மத்தியில் அன்று மட்டும் அது பேசுபடுபொருளாய் இருக்கலாம்.

உறவுகள், நட்புகள் மரணச் சடங்கில் கலந்து கொள்ளும். அத்தோடு அந்த இழப்பின் ஒட்டுமொத்த பாதிப்பும் சம்பந்தப்பட்ட குடும்பத்துக்குரியதாக உயில் எழுதப்பட்டு விடும்.

இதுதான் எங்கள் வடபுலத்தின் நிலைமை.

இதுபற்றி நாம் வேதனைப்படும் வேளையில், மின்சாரம் தாக்கியதால் மரணம். மனநோயால் பாதிக்கப்பட்டவர் அடித்ததில் ஒருவர் உயிரிழப்பு, நீரில் மூழ்கிய இளைஞர்கள் மாயம், விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் பலி என்பதான செய்திகள் பெருகிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான மரணங்கள் பற்றிய தகவல்களை அறியும்போது அதுசார்ந்து அவசர கூட்டங்களை நடத்துவது. எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் பற்றி ஆராய்வது. விழிப்புணர்வுக் கூட்டங்களை – வீதி நாடகங்களை நடத்துவது இதற்குப் பொது அமைப்புகளின் உதவிகளைப் பெறுவது என்ற தீர்மானங்களை எடுப்பது அரச நிர்வாகத்தின் கடமையாகும்.

ஆனால் எங்கள் வடபுலத்தில் இவை எதுவுமே நடப்பதாக இல்லை.

மாறாக வாகன சாரதிகளில் பெரும்பாலானவர்கள் கையடக்கத் தொலைபேசியில் உரையாடியபடி வாகனத்தைச் செலுத்துகின்றனர்.

இருந்தும் அதுபற்றி யாருமே கண்டுகொள்வதில்லை.

இந்நிலையில் பொறுப்பற்ற – அவசரமான – மற்ற உயிர்கள் பற்றிச் சிந்திக்காத சாரத்தியம் நம் மண்ணில் எங்ஙனம் உருவாகியதோ அந்த இயல்புகள் ஒவ்வொரு தனி மனிதர்களிடமும் ஏற்பட்டுள்ளதன் காரணமாக அவல மரணங்கள் மலிந்து போகின்றன.

இதைத் தடுக்காதவரை தமிழினம் என்று யார் மார்தட்டினாலும் அது அவர் சார்ந்த அரசியல் நோக்கம் கொண்டதேயன்றி இனப்பற்றுடன் கூடியதல்ல என்பதே நிதர்சனமான உண்மை.

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசு பலவந்தமாக திணிக்காது

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் பலவந்தமாக ஒருபோதும் நிறைவேற்றப் போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சி செயற்குழு உறுப்பினர் சாந்தினி கோன்கஹகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி இருந்தால் அதனை மேற்கொள்ள அரசு தயாராகவே இருக்கின்றது. அரசாங்கம் வர்த்தமானி மூலம் வெளிப்படுத்தி இருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், உலகில் எந்த நாட்டிலும் இல்லாத ஒரு சட்டம் போன்று அதனை எதிர்க் கட்சியினர் மற்றும் சிவில் அமைப்பினர் பூதாகரமாக்கி செயற்பட்டு வருகின்றனர். இதனை விட கடுமையான சட்டம் இந்தியாவில் இருக்கிறது. இந்தியாவில் அந்தச் சட்டத்தினை பயன்படுத்தியே தற்போது ராகுல் காந்தி கைதுசெய்யப்பட்டிருக்கிறார். அவரது பிரஜா உரிமையை இல்லாமல் செய்யவும் இடமிருக்கிறது. எமது நாட்டிலும் தற்போது இருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் மிகவும் கடுமையானது. அதனால்தான் அதற்கு எதிராக சர்வதேச நாடுகள் சிவில் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து, அதனை நீக்குமாறு தெரிவித்து வந்தன. மனித உரிமை அமைப்புகளும் இதற்கு எதிராக கருத்து தெரிவித்திருந்தன. அதனால்தான் தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றியமைத்து, பல முன்னேற்றகரமான திருத்தங்களுடன் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

என்றாலும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் அதனை விமர்சித்து வருவதால், அது தொடர்பில் கலந்துரையாடி திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தயாராகவே இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார். (ம-9)

## மசாஜ் நிலையத்தில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கந்தானைப் பகுதியில் உள்ள மசாஜ் நிலையம் ஒன்றில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 42 வயதுடையவர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. கந்தானை நாகொட பிரதேசத்தை சேர்ந்த இந்த நபர் நேற்று முன்தினம் நள்ளிரவு மசாஜ் நிலையத்துக்கு வந்துள்ளார். இந்நிலையில் நேற்று காலை அந்த நபர் அங்கு உயிரிழந்துள்ளார்.

மாரடைப்பு காரணமாக அவர் இறந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் கந்தானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-9)

## தந்தை, மகன் மீது கத்திக்குத்து

(கொழும்பு)

குடும்பத்தகராறில் கத்தியால் குத்தப்பட்ட தந்தையும் மகனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கட்டுபெத்த பகுதியில் பதிவாகியுள்ளது.

இதேவேளை, கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்ட நபரும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கட்டுபெத்த பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு முன்பாக இந்த கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ம-9)

## பாடசாலைக்குள் நுழைந்து மாணவர்கள் மீது கொடூரத் தாக்குதல்

அனுராதபுரம் பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றிற்குள் வெளியாட்கள் நுழைந்து, பாடசாலை மாணவர்களை தாக்கிய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

குறித்த பாடசாலையின் உயர்தர மாணவர்களுக்கு நேற்று முன்தினம் மேலதிக வகுப்பு இடம்பெறும் போதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது இரு மாணவர்கள் மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்தால் கொடூரமாக தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்த இரண்டு மாணவர்களும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், தாக்குதல் சம்பவம் தொடர்பில் அனுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## கங்கையில் நீராடச்சென்ற இரு மாணவர்கள் சடலங்களாக மீட்பு

பலாங்கொடை வளவைகங்கை வெலிஹரனாவ நீர் இறைக்கும் நிலையத்திற்கு அருகில் நீராடச் சென்று காணாமல்போன இரு மாணவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

17 வயதுடைய மாணவனும் மற்றும் 15 வயதுடைய மாணவனும் இந்த விபத்தில் சிக்கியுள்ளனர். அவர்கள் பலாங்கொடை தேசிய பாடசாலை மற்றும் பலாங்கொடை CC தமிழ் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் என தெரியவந்துள்ளது. இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் நீராட சென்றிருந்த போது நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த நிலையில் நேற்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். (ம-9)

## மக்களை காப்பாற்றிய ரணில் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும்

### வஜிர அபேவர்தன எம்.பி தெரிவிப்பு

இலங்கை மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அவரை தேசிய சொத்தாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆர்ப்பாட்டம், உணவு நெருக்கடி, எரிவாயு மற்றும் எரிபொருள் வரிசை யுகத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே முற்றுப் புள்ளி வைத்துள்ளார்.

விவசாயிகள் ஒரு புறம் போராட்டத்தில் ஈடுபட்டிருக்க ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சிறிது காலத்திலேயே அனைத்துப் போராட்டங்களுக்கும் தீர்வு கண்டுள்ளார்.

எனவே, அடுத்த தேர்தலில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவாராயின் மக்கள் அவரை தேசிய சொத்தாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். (ம-9)

## யாழ்.அத்தியடி பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவில் பெருந்திருவிழா-2023 கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பதினொரு தினங்கள்நடைபெறும் உற்சவத்தில் இன்று வியாழக்கிழமை சப்பைரத திருவிழாவும், நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தமான குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தாருங்கள்

## வட்டக்கச்சி மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வட்டக்கச்சி பத்து வீட்டுத்திட்ட கிராமத்தில் நூறுக்குமேற்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள் சுத்திகரிக்கப்படாத கிணற்று குடிநீரினை பருக வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில், சுத்தமான குடிநீர் விநியோகத்திற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அத்திட்டங்கள் இடைநடுவே கைவிடப்பட்டுள்ளதாக காணப்படுகின்றன.

எனவே குறித்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் தமக்கான சுத்தமான குடிநீர் வசதியை ஏற்படுத்தி தர வேண்டுமென தெரிவித்தனர். (4-6)

# இடம் மாற்றம்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் புதிய அலுவலகம் கடந்த 3 ஆம் திகதி முதல் சமுர்த்தி வங்கி அருகாமை, கிளிநகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (4)

# அக்கராயன் கரும்பு தோட்ட காணியை பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி, அக்கராயன் பகுதியில் இருக்கின்ற கரும்பு தோட்டக் காணிகளை பிரதேச மக்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பயன்படும் வகையில் பயன்படுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே குறித்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




குறித்த காணியில் கரும்பு செய்கையை மேற்கொள்வதற்கு தனியார் தொழில் முயற்சியாளர் ஒருவர் ஆர்வம் செலுத்தி வருகின்ற நிலையில், சுமார் 10 ஏக்கர் காணியை குறித்த தொழில் முயற்சியாளருக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குவதற்கும் மூன்று ஏக்கர் காணியை கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பயிர்ச்செய்கைகள் மேற்கொள்வதற்கு பொருத்தமான 146 ஏக்கர் காணிகளை குறித்த பிரதேசத்தினை சேர்ந்த காணி அற்ற மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அக்கராயன் பிரதேச சமூக அமைப்புக்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

# இறங்குதுறை வசதி இன்மையால் பள்ளிக்குடா மீனவர்கள் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் அதிகளவான கடற்தொழிலாளர்களைக் கொண்ட பள்ளிக்குடாப் பகுதியில் உரிய இறங்குதுறை வசதிகளின்மையால் சுமார் 460 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.



கிளிநொச்சி மாவட்டத்தின் அதிகளமான கடற்றொழிலாளர்களைக் கொண்ட பகுதியாக பூநகரி பள்ளிக்குடா பிரதேசம் காணப்படுகிறது.

குறித்த பகுதியில் சுமார் 160 வரையான தொழிலாளர்கள் 300 இற்கும் மேற்பட்ட படகுகளில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் உரிய இறங்குதுறை வசதிகள் இன்மையால் மேற்படி தொழிலாளர்கள் தமது படகுகள் மற்றும் இயந்திரங்களை தொழில்களுக்கு கொண்டு செல்வதிலும் தொழிலுக்கு சென்று திரும்புவதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு குறித்த பகுதியில் இறங்குதுறையை ஆழப்படுத்தி புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அவை இடைநடுவில் கைவிடப்பட்டதாகவும் குறித்த பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளதுடன் நாளாந்தம் தொழில் மூலம் கிடைக்கும் வருமானம் குறைவாக இருந்தும் உரிய இறங்குதுறை வசதிகள் இன்மை காரணமாக இயந்திரங்கள் படகுகள் தொடர்ச்சியாக சேதமடைந்து வருவதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தமக்கான இறங்குதுறைகளை உரியவாறு ஆழப்படுத்தி புனரமைத்து தருமாறும் தமது கடற்கரையோரப் பகுதிகளை கடல் அரிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள ஏற்ற வகையில் தடுப்புச் சுவர்களை அமைத்து தருமாறும் குறித்த பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-315)

# அதிகளவு மது கொள்வனவு இருவர் கைதாகி விடுவிப்பு

(சாவகச்சேரி)

விற்பனை நோக்கில் அதிகளவான மதுபானப் போத்தல்களை கொள்வனவு செய்து கொண்டு பேருந்தில் பயணிக்க முற்பட்ட இருவர் நேற்று புதன்கிழமை மதியம் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அளவுக்கதிகமான மதுபான போத்தல்களுடன் சாவகச்சேரி பேருந்து தரிப்பிடத்தில் இருவர் நிற்பதாக சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட மதுவரி உத்தியோகத்தர்கள் கிளிநொச்சி நோக்கி பயணிக்க தயாராக இருந்த பேருந்தில் வைத்து இருவரைக் கைது செய்துள்ளனர்.

அடுத்துவரும் நாட்களில் வருகின்ற விடுமுறை தினங்களில் விற்பனை செய்வதற்காக சாவகச்சேரியில் கொள்வனவு செய்யப்பட்ட 750மில்லிலீற்றர் கொள்ளளவுடைய 24 மதுப் போத்தல்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இதன் போது கைதான சந்தேகநபர்கள் இருவரும் ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (4-6-30)

## அரியாலை வெட்டுக்குளம்

# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய புதுவருடப் பிறப்பு வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடப் பிறப்பு வழிபாடுகள் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணி முதல் நடைபெறவுள்ளன.

பி.ப 2.30 க்கு அபிஷேகமும் 2.59 மணிக்கு சோபகிருது வருடப்பிறப்பு விஷேட பூசையும் அதனைத்தொடர்ந்த 3.30 இற்கு வசந்த மண்டபப்பூசையும் நடைபெற்று அம்பாள் உள்வீதி, வெளி வீதி உலாவரும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

அத்துடன் இன்று வியாழக்கிழமை மாலை 2.30 ற்குப் பின்னர் மருத்துநீர் வழங்கப்படும் என்றும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4)

# ஜனநாயகத்தை மேலும் பாதுகாக்கவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்

## என்கிறார் நீதி அமைச்சர்



(மன்னார்)

நாட்டின் ஜனநாயகத்தை மேலும் பாதுகாக்க பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இனம், மதம், கட்சி, வேறுபாடுகள் இருக்கும் வரை நாம் வளர்ந்த நாடாக மாற முடியாது. என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்பான மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக கடுமையான சட்ட நிபந்தனைகளைக் கொண்ட பயங்கர வாத தடைச் சட்டத்தை நீக்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் கொண்டு வரப்படவுள்ளது. அதற்கு எதிராக சிலர் செயற்படுகின்றனர்.

கடந்த 4 ஆண்டுகளில் ஈஸ்டர் தாக்குதல், தொற்று நோய் நிலைமைகள், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் தற்போதைய ஜனாதிபதியின் தலைமையில், எட்டு மாத குறுகிய. காலத்தில், நாடு அனைத்து வழிகளிலும் முன்னேறியுள்ளது. பொருளாதார ஆய்வாளர்கள் மற்றும் மக்கள் எதிர்பார்த்ததை விடவும் உள்ளது.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் வகையில் அணுகு முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும். எனவே ஒவ்வொருவரும் ஏனைய இனங்களையும் மதங்களையும் மதிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-6)



கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. (படம்- சப்தசங்கரி, தேவானந்தம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கியால்...

சுட்டு காயப்படுத்திய கணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்நேற்றுமுன்தினம்மாலை இடம்பெற்றுள்ளதாக அக்கராயன் குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த ஐந்து மாத கர்ப்பிணியான பெண் உடனடியாக அக்கராயன்குளம் வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவத்தில் 33 வயதான இரண்டு பிள்ளைகளின் தாயாரே படு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

கணவன் மது போதைக்கு அதிகம் பழக்கப்பட்டவர் என்பதனால் அடிக் கடி குடும்பத்தில் சண்டைகள் இடம் பெறும் எனவும் இதன் விளைவாகவே மனைவி மீதான துப்பாக்கிச் சூடு இடம் பெற்றுள்ளது எனவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் 40 வயதுடைய நபர் அக்கராயன்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-9,316)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 12/04/2023

சீட்டிழுப்பு இலக்கம் 1543

வெற்றி இலக்கங்கள்

தனுசு 4 6 8 8 6 4

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2023.04.12

சீட்டிழுப்பு இலக்கம் - 1118

X 05 41 58 67

ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9436

### கொவிசெத

திகதி 2023.04.12

சீட்டிழுப்பு இலக்கம் 3330

ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

D 13 15 22 26

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 12/04/2023

சீட்டிழுப்பு இலக்கம் 1436

வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்

C 04 29 31 69 79

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 2023.04.12

சீட்டிழுப்பு இலக்கம் 397

வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம் 15 24 33 45 விருச்சிகம்

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/04/12

சீட்டிழுப்பு இலக்கம் 5088

ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்

U 5 1 5 9 0 7

தேசிய லொத்தர் சபை

## ஊடகங்களை...

டுள்ள கருத்து தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை மேலும் பலப்படுத்துவதற் காக ஒளிபரப்பு அதிகார சட்டத்தை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

ஜனநாயகத்தின் நான்கு தூண் களில் ஒன்றான ஊடகத்தை முடக்கு வதற்காகவே இந்த சட்டத்தை அர சாங்கம் உருவாக்குகிறது.

ஊடகங்களுக்கு எதிரான இவ் வாறான அடக்குமுறைகளை அனை வரும் இணைந்து முற்றாக எதிர்க்க வேண்டும். ஜனநாயகத்தை பாதுகாப் பதற்கு ஊடகம் என்பது அத்தியாவசிய மான காரணியாகும்.

சுதந்திரமான ஊடகம் அற்ற நாட் டில் சர்வாதிகார ஆட்சி தலைதூக்கும். இலங்கை சர்வாதிகார நாடாக மாற்ற மடைவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

அரசாங்கத்தினால் முன்னெடுக் கப்படும் மோசமான நடவடிக்கைகளை மக்களிடமிருந்து மறைப்பதற்காகவே ஊடகங்களை ஒடுக்கும் முயற்சி மேற் கொள்ளப்படுகிறது.

இதன் ஊடாக அரசாங்கத்துக்கு சார்பான செய்திகளை மாத்திரமே வெளியிடக்கூடியவாறான ஊடக கலா சாரம் உருவாக்கப்படவுள்ளது.

இந்த முயற்சியை தோல்வியடை யச் செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முன்னின்று செயற்படும். அதேபோல் சகல தரப்பினரும் இதற்கு முழுமை யான எதிர்ப்பினை வெளிப்படுத்த வேண்டும்.

புதியபயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத் துக்கு மேலதிகமாக மக்களை மேலும் முடக்குவதற்காகவே இந்த சட்டம் அறி முகப்படுத்தப்படுகிறது என்றார். (ம-9)

## கருப்பை வெடித்...

பருத்தித்துறை திடீர் மரண விசா ரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா வினால், மேலதிக விசாரணையை மேற்கொள்வதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புலோலி வடக்கு, கூவில் பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் பிரசவத்திற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

குறித்த பெண்ணுக்கு நேற்று முன் தினம் குழந்தை பிறந்த போதிலும் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

சம்பவம் தொடர்பில் பிரேத பரி சோதனை மேற்கொள்ளுமாறு பருத் தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விடுத்த பணிப்புரைக்கு அமைய, சட்ட வைத் திய அதிகாரி பிரேத பரிசோதனையை மேற்கொண்டுள்ளார்.

பிரசவ ஊசி செலுத்தப்பட்டதன் பின் னர் தாய் உரிய முறையில் கவனிக்கப் படாமையால், கருப்பை வெடித்து, சிசு விற்கு குருதி கடத்தப்படுவது தடைப் பட்டுள்ளமை பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக பருத்தித் துறை திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா தெரிவித்தார்.

இதன் அடிப்படையில், மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற் கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, பருத்தித்துறை பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளதாகவும் அவர் கூறினார்.(ம-9,60)

## 13ஆவது திருத்த...

கட்சிகளின் ஆதரவுடன் 13ஆவது திருத் தத்தை அமுல்படுத்த இணக்கப்பாட் டுக்கு வருவதே குழுவின் முதற்கட்ட நட வடிக்கை என அமைச்சர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அனைத்துத் தரப்பினரு டனும் கலந்தாலோசித்து பயங்கர வாதத் தடைச் சட்டத்தை சர்வதேச தரத் திற்கு ஏற்ப கொண்டுவருவது இரண் டாவது நடவடிக்கை எனக் கூறினார்.

இதேநேரம் பொறுப்புக்கூறல் நட வடிக்கைக்காக உண்மையைக் கண் டறியும் உள்ளக பொறிமுறையை நிறு வுவதே உபகுழுவின் மூன்றாவது படி என்றும் அலி சப்ரி குறிப்பிட்டார்.

இன நல்லிணக்க செயற்பாட்டிற்கு முன்னுரிமை அளித்து, நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி அதனூடாக அபிவிருத்தி அடைவதே ஜனாதிபதியின் நோக்கம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ம-9)

## தமிழர் தாயகத்...

தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வெளியிட்ட அறிக்கை யில்,

தமிழ் மக்கள் சார்ந்த தேசிய சக்தி கள், சமய சமூக தன்னார்வ அமைப் புக்கள் என பல தரப்புக்கள் இணைந்து முன்னெடுக்கும் மாபெரும் போராட் டத்தின் பிரதான கோரிக்கைகள்,

1.அழிக்கப்பட்ட வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் சிவலிங் கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டும். நீதி யான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட் டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

2.குருந்தூர் மலை, கன்னியா வெந் நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமை கள் உடனடியாக மீள வழங்கப்படுவது டன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய வர்த்த மானி இரத்து நடைமுறையில் செயற் படுத்தப்பட வேண்டும்.

3.இன மத நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன் மங்களை, மரபுரிமைகளை மாற்றி யமைக்கும் தொல்லியல் திணைக் களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

4.மட்டு. மயிலத்தனை மடு மேய்ச் சல் தரையில் பெரும்பான்மை இன மக் களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர் களின் மரபுரிமையான மேய்ச்சலுக் கான வாழ்வுரிமை உறுதிப்படுத்த வேண்டும்.

5.போருக்கு பிந்திய இன மதப்பரம் பலை மாற்றியமைக்கும் திட்டமிட்ட பாரிய குடியேற்றம் உள்ளிட்ட செயற் பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத் தப்பட வேண்டும்.

ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து மாபெரும் அடையாள உண்ணாநோன்பு போராட்டம் முன் னெடுக்கப்படவுள்ளது.

எம் மரபுரிமைகளை வென்றெடுக்க ஆன்மீகத் தலைவர்கள், ஆலய அறங் காவலர்கள், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், சமூக மட்ட அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள், பல்கலைக்கழக சமூகம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்படும் இந்த எழுச்சி போராட்டத்தின் மூலம் தமிழர் மர புரிமைகளை வென்றெடுக்க தமிழ் மக் கள் திரண்டு வந்து பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் பல கால அவ காசங்கள் வழங்கப்பட்டு, ஏமாற்றப் பட்ட நிலையில் உரிய தீர்வு உடனடி யாக வழங்கப்படாவிடத்து தொடர் போராட்டங்களை பல்வேறு பரிணாமங் களில் முன்னெடுக்கப்படும் என்பதை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் இச்சந் தர்ப்பத்தில் ஆழமாக வலியுறுத்தி நிற் கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம-9)

## காய்ச்சல்...

அபாயம் உள்ளதால் இந்த நாட்களில் பொதுமக்களை மிகுந்த அவதானத் துடன் இருக்குமாறு மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

கர்ப்பிணிப் பெண்கள், நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற் றும் கைக்குழந்தைகள் இந்த வைரஸ் தொற்றுநோய்களைத் தவிர்க்க வேண் டும்.

ஏனெனில் இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டால் அவர்கள் உயிரைக் கூட இழக்க நேரிடும் என தெரிவிக்கப்பட் டுள்ளது. (ம-9)

## பயங்கரவாத...

சயம் அதற்கான நடவடிக்கையை எடுக்கும் என நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்று சர்வதேசம் உட்பட பல்வேறு தரப் பினரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரு கின்றமை தொடர்பில் தெளிவுபடுத்தும் போது இதனைத் தெரிவித்தார். (ம-9)


# கண்ணீர் அஞ்சலி

ஓய்வுநிலை விவாகப் பதிவாளர்

## வ.இ.க.இரத்தினசபாபதி

(சமாதான நீதிவான்)



அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ் மாவட்ட விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத்தினர் (C-6349)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 39 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15243)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**



## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் (நிலப்பரப்பு) 36 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பரப்பின் விலை (125,000/=) ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.
- புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி

(15243)

**076 755 8606**
**077 638 5683**



## காணி விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு பூதர்மடம் சந்தியில் பருத்தித்துறை வீதியில் இருந்து 500m தொலைவில் (மலையக் கனவளவு வயிரவர் ஆலயத்திற்கு அருகாமையில்) உள்ள மூன்று பரப்பு காணியும், பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தொலைவில் உள்ள பதினொன்றே முக்கால் வயல் காணியும் விற்பனைக்கு உண்டு. (15245)

**077 583 5015, 071 630 1452**



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல சோடா விற்பனை முகவர் நிலையத்தின் நெல்லியடி கிளைக்கு கணக்காளர் (கணனி அறிவுடைய) வேலையாட்கள் தேவை.
(இருபாலரும் விண்ணப்பிக்கலாம்)

- **நெல்லியடி, கரவெட்டி, உடுப்பிட்டி பருத்தித்துறை போன்ற இடங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.**

**உங்கள் சுயவிபரக் கோவையை விளம்பர இலக்கம் 6220 வலம்புரி பத்திரிகை இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

(C-6220)


## உள்ளூராட்சி...

நடத்துவதை ஒத்திவைக்கப்பட்டுள்ளதை அடுத்து இந்த தேர்தல் இந்த வருடம் இடம் பெறுவதற்கு மிகவும் குறுகிய சந்தர்ப்பமே தற்போது இருக்கிறது. தேர்தலை நடத்துவதற்கும் அரசாங்கம் எந்த தயாரும் இல்லாத நிலையே காணக்கூடியதாக இருக்கிறது என்றார். (ம-9)

## ராஜஸ்தான் வெற்றி



சென்னைக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 175 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுபெடுத்தாடிய சென்னை அணி 20 ஓவர்கள் முடிவில் 172 ஓட்டங்கள் பெற்று தோல்வியடைந்தது. (ம-9)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி வழிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 02 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- ⇨ A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி
- ⇨ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ⇨ கைதடி சந்தியிலிருந்து 500m தூரம்
- ⇨ A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் காணி உள்ளது.

(15243)

**076 436 5814,076 739 0413**



## English Classes

**Gr 1 to O/L**

தனி மற்றும் குழு வகுப்புகள்

**Let's Learn**

- Grammar
- School syllabus
- Spoken
- Writing skills
- Monthly exams

(15237)

வீடு வந்து கற்பிக்கப்படும். **077 331 4608** (யாழ்ப்பாணம்)



## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6334)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள்

(C-6334)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777


## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 21 - 04 - 1939



விண்ணில் 28 - 03 - 2019

### அமரர் பத்மநாதன் அன்னலட்சுமி

*திதி - அட்டமி 13.04.2023*

ஓயாது அம்மா உந்தன் நினைவுகள் வாட்டுதே
விண்ணில் நீ விரைந்தது விதி செய்த கோலத்தால்
கண்ணில் நீர் சொரிந்து கலங்கி தவிக்கின்றோம்
அம்மா உன் பிரிவு ஆறமுடியாத சோகமே
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எம் முன்னே உனைக் காண்கிறோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர்
முருகனை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(C-6348)

கோவில் வீதி,
நல்லூர்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்துக்களும்





எமது பாடசாலையில் சிறப்பாகக் கல்விச் சேவை புரிந்து இன்று 13.04.2023 ஓய்வு பெறும் ஆசிரியர்

**திரு. ஞானப்பிரகாசம் அன்ரனி தவச்செல்வம்**

அவர்களது பணியினை பாராட்டுவதோடு அவரது ஓய்வுக் காலம் சிறக்கவும், மேலும் பல சமூகப்பணிகள் ஆற்றி பல்லாண்டு காலம் வாழ வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

**அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள்**
**யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்**

(15213)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.